தினமணி

# பருத்திச் சாகுபடி 340 லட்சம் பேல்களாக உயரும்

First Published : 02 Jan 2012 01:17:10 AM IST

மும்பை, ஜன.1: நெல், கோதுமையை விட பருத்திக்குக் கிடைக்கும் நல்ல விலை, சாகுபடி மாநிலங்களில் பரவலாக பெய்த நல்ல மழை, விவசாயிகளிடையே ஏற்பட்ட ஆர்வத்தால் சாகுபடி பரப்பில் அதிகரிப்பு, மரபணு மாற்றப்பட்ட பருத்தியைச் சாகுபடிக்குப் பயன்படுத்தியது, அனைத்து இடுபொருள்களும் கிடைக்க மத்திய, மாநில அரசுகள் எடுத்த நடவடிக்கை, நவீன சாகுபடி முறைகளைக் கையாண்டது ஆகிய காரணங்களால் இந்த ஆண்டு 340 லட்சம் பேல்கள் பருத்தி சாகுபடியாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

உள்நாட்டில் பருத்திக்கான தேவை அதிகபட்சம் 250 லட்சம் பேல்கள்தான். எனவே இந்த உபரியே இப்போது பிரச்னையாகி வருகிறது.

அமெரிக்காவிலும் ஐரோப்பிய நாடுகளிலும் ஏற்பட்டுள்ள பொருளாதார மந்த நிலை காரணமாக சர்வதேசச் சந்தையில் பருத்திக்குத் தேவை குறையும் என்று தெரிகிறது. இந்த நிலையில் கையிருப்பில் உள்ள பருத்தியுடன் புதிய பருத்தியும் சேர்ந்தால் லாபம் குறையும் என்ற கவலை இந்திய பருத்திச் சங்கத்துக்கு ஏற்பட்டிருக்கிறது. இதை இந்திய பருத்திச் சங்கத் தலைவர் திரேன் சேத், மும்பை நகரில் நிருபர்களிடம் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தார்.

2009-10-ம் ஆண்டில் பருத்திக்கு கிராக்கி ஏற்பட்டு உள்நாட்டுச் சந்தையில் அதிக விலைக்கு வாங்கப்பட்டது. இதனால் விவசாயிகள் பருத்திச் சாகுபடியில் ஆர்வம் காட்டினார்கள். பருத்தி பயிரிடும் பரப்பளவு கூடியது. அதே வேளையில் பருத்திச் சாகுபடியில் நவீனத் தொழில்நுட்பத்துடன், மரபணு மாற்றப்பட்ட நவீன விதைகளும் பயன்படுத்தப்பட்டன. மத்திய, மாநில அரசுகள் பருத்திச் சாகுபடி பெருக அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்தன. 10 மாநிலங்களில் நல்ல மழை பெய்தது. இதனால் பருத்தி விளைச்சல் இந்த ஆண்டு அமோகமாக அதிகரித்திருக்கிறது.

அதே வேளையில் இந்தியச் சந்தையிலும் வெளிநாட்டுச் சந்தையிலும் பருத்திக்கான தேவை அதிகரிக்கவில்லை. எனவே சாகுபடியாளர்கள் எதிர்பார்த்த லாபம் கிடைப்பது சந்தேகம்தான். எனவேதான் நாங்கள் கவலைப்படுகிறோம் என்கிறார் திரேன் சேத்.

2002-2003-ல் ஒரு ஹெக்டேருக்கு 302 கிலோ பருத்திதான் விளைந்தது. அதுவே 2011-12-ல் 500 கிலோவாக உயர்ந்திருக்கிறது. அப்படியிருந்தும் சர்வதேச அளவில் அமெரிக்கா, சீனா,

பாகிஸ்தான், பிரேசில் ஆகிய நாடுகளைவிட இந்தியாவில் பருத்தி உற்பத்தித் திறன் குறைவாகவே இருக்கிறது. இந்திய மண் வளம், சாகுபடி முறைகள், தண்ணீர் கிடைப்பதில் உள்ள நிச்சயமற்ற தன்மை ஆகியவையே இதற்குக் காரணங்கள் என்றார் சேத்.

**இன்று மழை வாய்ப்பு**

First Published : 02 Jan 2012 01:44:27 AM IST

சென்னை, ஜன. 1: தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் திங்கள்கிழமை (ஜனவரி 2) மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

தமிழகம், புதுவையைத் தாக்கிய தானே புயல் மேற்கு நோக்கி நகர்ந்து, அரபிக் கடலில் லட்சத்தீவு அருகே வலுவிழந்துவிட்டது. இந்நிலையில் வடகிழக்கு பருவ மழை ஜனவரி 15-ம் தேதி வரை நீடிக்கும்.

இப்போது, மேகங்களில் அதிக ஈரப்பதம் காணப்படுகிறது. இவை கருமேகங்களாகத் திரண்டு வடக்கு கடலோர தமிழகம், புதுவை உள்ளிட்ட பகுதிகளில் ஒரு சில இடங்களிலும், தெற்கு கடலோர தமிழகம், உள் தமிழகம் உள்ளிட்ட பகுதிகளில் ஓரிரு இடங்களிலும் அடுத்த 24 மணி நேரத்துக்குள் மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

சென்னையில் வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். ஒரு சில இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

மழை அளவு: ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி நிலவரப்படி பெய்துள்ள மழை அளவு (மில்லி மீட்டரில்): பாபநாசம் (திருநெல்வேலி மாவட்டம்), குந்தா பாலம் 50, குன்னூர், கோத்தகிரி 40, பேச்சிப்பாறை 30, திருச்சுழி, திருமங்கலம், கழுகுமலை, செங்கோட்டை, சிவகிரி 20.

ஞாயிற்றுக்கிழமை காலையில் சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் பரவலாக மழை பெய்தது.

**கரூர் மாவட்டத்தில் 21 மி.மீ மழை**

First Published : 01 Jan 2012 12:05:18 IST

கரூர், டிச.31: கரூர் மாவட்டத்தில் சனிக்கிழமை காலை 8 மணி வரை 21 மி.மீ. மழை பதிவாகியுள்ளது.

வங்கக்கடலில் உருவாகியுள்ள தானே புயல் வெள்ளிக்கிழமையன்று கரையைக் கடந்தது. இந்நிலையில், கரூர் மாவட்டத்தில் வெள்ளிக்கிழமை பரவலாக மழை பெய்தது. அதைத் தொடர்ந்து சனிக்கிழமை காலையிலும் சில இடங்களிலும் பெய்தது.

கரூர் மாவட்டத்தில் சனிக்கிழமை காலை 8 மணி நிலவரப்படி பெய்த மழை அளவு (மில்லி மீட்டரில்): மயிலம்பட்டி- 40, கரூர்- 37.60, பஞ்சப்பட்டி- 30.6, க.பரமத்தி- 25.6, அணைப்பாளையம்- 23.2, அரவக்குறிச்சி- 20.5, பாலவிடுதி- 20.3, கடவூர்- 13, கிருஷ்ணராயபுரம்- 12, குளித்தலை- 7.4, தோகைமலை- 7, மாயனூர்- 1.7 மழை பதிவாகியிருந்தது.

இதனால் மாவட்டத்தில் சராசரியாக 21.21 மி.மீ மழை பதிவானது.

**மீனவப் பகுதிகள் ஆய்வு**

First Published : 01 Jan 2012 09:31:28 AM IST

திண்டிவனம், டிச. 31: மரக்காணம் பகுதியில் பாதிக்கப்பட்ட மீனவர் பகுதிகளை பள்ளி கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் சி.வி.சண்முகம் மற்றும் அரசு அதிகாரிகள் சனிக்கிழமை நேரில் பார்வையிட்டனர்.

÷மரக்காணம் கடலோரப் பகுதியில் வசிக்கும் மீனவக் கிராமங்களுக்குச் சென்று சேத பகுதிகளை அமைச்சர் சி.வி.சண்முகம் பார்வையிட்டார். குறிப்பாக கைபானிக்குப்பம், அழகியபாக்கம், வசவன்குப்பம், மண்டவாய்புதுக்குப்பம், எக்கியான்குப்பம், அனுமந்தைகுப்பம் உள்ளிட்ட பகுதிகளுக்குச் சென்ற அமைச்சர் அங்கு வசிக்கும் மீனவர்களிடம் புயலால் படகு மற்றும் மீன் வலைகளுக்கு ஏற்பட்ட சேதங்களை கேட்டறிந்தார்.

**மஞ்சள் விவசாயிகளுக்கு மானிய விலையில் கருவிகள்**

First Published : 01 Jan 2012 10:02:21 AM IST

ஈரோடு, டிச.31: மஞ்சள் விவசாயிகளுக்கு மானிய விலையில் பாயிலர், பாலீஷ் இயந்திரம் வாங்க மத்திய அரசு மானியம் வழங்குகிறது.

மத்திய அரசின் நறுமண பயிர்கள் வாரியத்தின் (ஸ்பைசல் போர்டு) கோவை கள அலுவலகம் மூலமாக மஞ்சள், மிளகு, ஏலக்காய் உள்ளிட்டவை பயிர் செய்யும்

விவசாயிகளுக்கு மானிய விலையில் இயந்திரங்களை வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன்படி மஞ்சள் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு வேக வைப்பதற்கான பாய்லர், பாலீஸ் செய்யத் தேவையான பாலீஸர் மெஷின் ஆகிய இயந்திரங்கள் 50 சத மானியத்தில் வழங்கப்படும்

என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதே போல மிளகு விவசாயிகளுக்கு மிளகை தனியாக பிரித்தெடுக்க திரஸர் இயந்திரம் மற்றும் ஏலக்காய் விவசாயிகளுக்கு ஏலக்காய் உலர்த்துவதற்கான டிரையர் இயந்திரம் 33.33 சத மானியத்தில் வழங்கப்பட உள்ளது.

மானிய விலையில் இயந்திரங்களை வாங்க விரும்பும் விவசாயிகள் நறுமண பயிர்கள் வாரியம், மீனாட்சிநகர், தடாகம் சாலை, ஆர்.எஸ்.புரம், கோவை 2 என்ற முகவரியை அணுகலாம்.

அல்லது 0422-2474430 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு விவரங்களை தெரிந்து கொள்ளலாம் என்று ஸ்பைசல் போர்டு முதன்மை கள அலுவலர் கனகதிலீபன் தெரிவித்துள்ளார்.

**வெண்பன்றி வளர்ப்பு பயிற்சி**

First Published : 01 Jan 2012 12:03:16 IST

பெரம்பலூர், டிச. 31: பெரம்பலூர் மாவட்டம், வாலிகண்டபுரத்திலுள்ள ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மைய வளாக பயிற்சிக் கூடத்தில், வெண்பன்றி வளர்ப்பு குறித்த இலவச பயிற்சி முகாம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

முகாமுக்கு திட்ட ஒருங்கிணைப்பாளர் இரா. மாரிமுத்து தலைமை வகித்தார். வேளாண் அறிவியல் மைய கால்நடை அறிவியல் தொழில்நுட்ப வல்லுநர் மருத்துவர் பி. சிவகுமார், வெண்பன்றி வளர்ப்புக்கான சீமைப்பன்றி இனங்களை தேர்வு செய்தல், கொட்டகை அமைத்தல், தீவன மேலாண்மை, இனவிருத்தி மேலாண்மை, பொலிப் பன்றிகள், சினைப் பன்றிகளின் பராமரிப்பு, இளம் பன்றிகள் மற்றும் பன்றிகளில் ஏற்படும் நோய்களை கட்டுப்படுத்தும் முறைகள், தடுப்பூசி முறைகள், தீவனக் குறைபாடுகளால் ஏற்படும் நோய்களும் அதற்கான தடுப்பு முறைகள், பதிவேடுகள் பராமரித்தல் மற்றும் வெண் பன்றி பண்ணையுடன் ஒருங்கிணைந்த மீன் பண்ணையம் அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் பயிற்சி அளித்தார்.

அதைத்தொடர்ந்து, தந்தை ரோவர் வேளாண் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள மாதிரி வெண்பன்றி பண்ணைக்கு பயிற்சியாளர்களை அழைத்துச் சென்று பன்றி வளர்ப்பு முறைகள், கொட்டகை அமைப்பு, இளம் பன்றிகளில் பற்கள் வெட்டுதல், வால் வெட்டுதல் மற்றும் இனவிருத்திக்கு பயன்படாத கிடாபன்றிக்கு ஆண்மை நீக்கம் செய்தல், பெண் பன்றிகளில் சினைப் பருவ அறிகுறிளை கண்டறிதல், வெண் பன்றிகளுக்கான தீவனம் தயாரித்து அளித்தல் குறித்து நேரடி செயல் விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது.

இப்பயிற்சியில், பெரம்பலூர், அரியலூர், கடலூர் மற்றும் திருச்சி ஆகிய பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த 30-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

பயிற்சியில் பங்கேற்ற நபர்களுக்கு, வெண்பன்றி வளர்ப்பு குறித்த பயிற்சிக் கையேடு அளிக்கப்பட்டது. இதற்கான ஏற்பாடுகளை, வேளாண் விரிவாக்க தொழில் நுட்ப வல்லுநர் கே. மணிகண்டன் மற்றும் பணியாளர்கள் செய்திருந்தனர்.

**வன விரிவாக்க மையத்தில் விவசாயிகளுக்கு காடு வளர்ப்பு பயிற்சி**

First Published : 01 Jan 2012 12:01:58 IST

பெரம்பலூர், டிச. 31: பெரம்பலூர் அருகேயுள்ள, சித்தளி கிராமத்தில் அமைந்துள்ள வனவியல் விரிவாக்க மையத்தில் உலக வன ஆண்டை முன்னிட்டு விவசாயிகளுக்கான விழிப்புணர்வு கருத்தரங்கம் அண்மையில் நடைபெற்றது.

கருத்தரங்குக்கு மாவட்ட வன அலுவலர் எஸ். குருசாமி தலைமை வகித்தார். வன விரிவாக்க அலுவலர் என். கலியபெருமாள் முன்னிலை வகித்தார்.

மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் செ. சிவக்குமார், தொழில்நுட்ப முறையில் மரக்கன்றுகள் வளர்க்கும் முறை, வேம்பு, புங்கை ஆகியவற்றை வயல்பகுதிகளில் நடவு செய்வது குறித்து விளக்கிப் பேசினார்.

திருச்சி வனவியல் விரிவாக்க கோட்ட வன அலுவலர் பி. சொர்ணப்பன், மண்ணின் தன்மையை அறிந்து அதற்கேற்ப மரக்கன்றுகளை நடுவதன் அவசியம், அதனால் கிடைக்கும் பயன்கள் குறித்தும், சித்த மருத்துவ அலுவலர் கோசிபா நோய் தீர்க்கும் மர வகைகள், மூலிகை செடிகளை நட்டு பராமரிப்பது, மருந்துகளுக்கு பயன்படும் மரக்கன்றுகளை நட்டு வாழ்க்கையில் மேம்பாடு அடைவது குறித்தும், ஹேன்ஸ் ரோவர் வேளாண்மை அறிவியல் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் இரா. மாரிமுத்து பண்ணைக்காடுகள் குறித்தும், மாவட்ட சுற்றுச்சூழல் ஒருங்கிணைப்பாளர் எஸ். கோபால் உலக வெப்பமயமாதல் குறித்தும் விளக்கி பேசினர்.

இதில், பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டனர்.

முன்னதாக, சித்தளி வனவியல் விரிவாக்க மைய விளம்பர அலுவலர் பி. மாயவேலு வரவேற்றார்.

**ரூ.10 லட்சம் மதிப்பு பாசிப்பயறு பயிர் புயல், மழையால் சேதம்**

First Published : 01 Jan 2012 09:26:04 AM IST

திருவள்ளூர், டிச. 31: தானே புயல் காரணமாகப் பெய்தத் தொடர் மழையால் திருவள்ளூர் அருகே 50 ஏக்கரில் பயிரிடப்பட்டிருந்த பாசிப்பயறு செடிகள் அழுகி சேதமடைந்துள்ளன. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

திருவள்ளூரை அடுத்த கடம்பத்தூர் ஒன்றியத்துக்கு உட்பட்ட ஏகாட்டூர் கிராமத்தில் விவசாயிகள் 50 ஏக்கருக்கும் மேல் பாசிப்பயறு பயிரிட்டிருந்தனர். இந்தப் பயிர் 60 நாள் முதல் 80 நாள்களுக்குள் அறுவடை செய்யப்படும். இந்நிலையில் ஏகாட்டூர் கிராமத்தில் உள்ள விவசாயிகள் கடந்த 15 தினங்களுக்கு முன்ப் பாசிப்பயிரை விதைத்தனர்.

இந்தப் பயிர் தலை தூக்கும் அளவில் வளந்து வரும் நிலையில், தானே புயல் காரணமாகக் கடந்த இரு தினங்களாகத் தொடர் மழை பெய்தது. இதில் பயிர்கள் தண்ணீரில் மூழ்கியுள்ளன. இதனால் செடிகள் அழுகி வருகிறது. மேலும் ஏராளமான செடிகள் சாய்ந்து விழுந்துள்ளது. இதனால் விவசாயிகளுக்கு பெரும் நஷ்டம் ஏற்படும் நிலை உள்ளது.

ஒரு ஏக்கருக்கு பாசிப்பயறு பயிர் பயிரிட குறைந்த பட்சம் ரூ.5 ஆயிரம் செலவாகும். அறுவடையின் போது விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு 20 ஆயிரம் ரூபாய் வருவாய் கிடைக்கும்.

தற்போது 50 ஏக்கருக்கும் மேல் பாசிப்பயறு பயிர்கள் நீரில் மூழ்கி அழுகியதால் அப்பகுதி விவசாயிகள் மிகவும் கவலை அடைந்துள்ளனர். எனவே வேளாண்துறை அதிகாரிகள் இது குறித்து ஆய்வு மேற்கொண்டு, உரிய இழப்பீட்டுத் தொகையை வழங்க ஆவன செய்ய வேண்டும் என அப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**புயல் சேதம் ரூ.1,000 கோடி?**

First Published : 01 Jan 2012 02:29:05 AM IST



"தானே' புயலால் தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் அருகேயுள்ள பழியஞ்சநல்லூர் பகுதியில் சாய்ந்து கிடக்கும் நெல் பயிர். நாள்: சனிக்கிழமை.

சென்னை,டிச.31: "தானே' புயலால் தமிழகத்துக்கு ஏற்பட்டுள்ள சேத மதிப்பு ஆயிரம் கோடி ரூபாய்க்கும் மேல் என்று முதல் கட்ட ஆய்வில் தெரியவந்துள்ளது. சேதம் அடைந்த பகுதிகளில் போர்க்கால அடிப்படையில் நிவாரணப் பணிகளை வருவாய் நிர்வாகத் துறை முடுக்கி விட்டுள்ளது. மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் இந்த மீட்புப் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து வருகின்றனர்.

அதிகம் பாதிக்கப்பட்ட கடலூர், விழுப்புரம் மாவட்டங்களில் சேதம் அடைந்த குடிசைகளை கணக்கெடுக்கும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இந்தப் பணிகள் ஓரிரு நாள்களில் முடிக்கப்பட்டு, குடிசைகளை இழந்து பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணத் தொகை ஞாயிற்றுக்கிழமை முதல் வழங்கப்பட உள்ளன.

தமிழக கடலோரப் பகுதியை மையம் கொண்ட "தானே' புயல், கடலோர மாவட்டங்களான கடலூர், விழுப்புரம் மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசம் ஆகிய பகுதிகளில் பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளன.

இந்தப் புயலின் பாதிப்புக்கு உள்ளாகி தமிழகத்தில் மட்டும் 35 பேர் வரை உயிரிழந்துள்ளனர்.

குடிசைகள் சேதம்: கடலூர், விழுப்புரம் மாவட்டங்களில் முழுமையாகச் சேதம் அடைந்த குடிசைகள் எத்தனை, பகுதி அளவு சேதம் அடைந்தவை எவ்வளவு என்ற கணக்கெடுப்புகளை கிராம நிர்வாக அலுவலர்கள் மேற்கொண்டு வருகின்றனர். அவர்கள் தங்களது கணக்கெடுப்பை மாவட்ட ஆட்சியர்களிடம் தெரிவிப்பர். இந்தப் பணிகள் ஓரிரு நாளில் முடிக்கப்பட்டுவிடும் என சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனால், குடிசைகளை முழுமையாக இழந்த ஒரு குடும்பத்துக்கு ரூ. 5 ஆயிரமும், பகுதி அளவு சேதம் அடைந்த குடிசைக்கு ரூ.2,500-ம் நிவாரணத் தொகையாக வழங்கப்படும். பாதித்தோருக்கு இந்தத் தொகைகளை வழங்கும் பணி ஞாயிற்றுக்கிழமை முதல் தொடங்கும் என தமிழக அரசு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

பயிர்கள் சேதம்: புயல் அடித்தபோதும் பலமாக காற்று மட்டுமே வீசியதால் மழையின் அளவு குறைவு என்பதால் பயிர்களுக்குள் அதிகளவு தண்ணீர் புகவில்லை. ஆனால், பயிர்கள் சாய்ந்து சேதம் அடைந்துள்ளன. எனவே, சேதம் அடைந்த பயிர்களைக் கணக்கெடுக்க வேளாண் துறைச் செயலாளர் தலைமையில் தனியாகக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவில் வேளாண் அதிகாரிகள் இடம்பெற்றுள்ளனர். அவர்கள் பயிர்ச்சேதம் குறித்த கணக்கெடுப்பை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தக் கணக்கெடுப்புப் பணிகள் ஜனவரி 3 அல்லது 4-ம் தேதிக்குள் முடிக்கப்பட்டு விடும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதன்பின், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணத் தொகை வழங்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ரூ.1,000 கோடி சேதம்? குடிசைகள், பயிர்கள், வீடுகள், தொழில் வணிக நிறுவனங்கள், சாலைகள், பாலங்கள், அரசு கட்டடங்கள், மின்சாரக் கம்பங்கள், விளக்குகள், மின்மாற்றிகள், மின்சார வயர்கள் என கடலூர், விழுப்புரம் மாவட்டங்களில் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது. இது ஆயிரம் கோடி ரூபாய்க்கும் மேல் இருக்கலாம் என முதல் கட்ட ஆய்வில் தெரிய வந்துள்ளது. எனினும், முழுமையான சேதம் குறித்த தகவல்கள் கிடைப்பதற்கு ஓரிரு நாள்கள் ஆகும்.

பால்-மின்சாரம்: கடலூருக்கு மின்சாரம் வழங்கும் அமைப்புகள் அனைத்தும் சேதம் அடைந்துள்ளன. இதனால், 110 கிலோ வோல்ட் திறன் கொண்ட அமைப்பு தாற்காலிகமாக

அமைக்கப்பட்டு மருத்துவமனைகள், தண்ணீர் சப்ளை ஆகியவற்றுக்கு அந்த மின்சாரம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மின்சாரம் வழங்கும் பணியைச் சீராக்க தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அதிகாரிகள் கூறுகின்றனர்.

பால் இல்லாமல் மக்கள் அவதிப்பட்டு வருவதாக வந்த செய்திகளைத் தொடர்ந்து, சென்னையில் இருந்து ஆவின் நிறுவனத்தின் மூலம் 2 ஆயிரத்துக்கும் அதிகமான லிட்டர் பால் கடலூருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அந்த நிறுவன அதிகாரிகள் தெரிவித்தனர்.

மண்ணெண்ணெய் இல்லாமல் அவதிப்படுவதாக வந்த புகார்களைத் தொடர்ந்து, உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை சார்பில் 1 லட்சத்து 32 ஆயிரம் லிட்டர் மண்ணெண்ணெய் கடலூருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

சாலைகளில் விழுந்த மரங்கள்: புயல் காற்று காரணமாக, சாலைகளில் மரங்கள் வேரோடு சாய்ந்துள்ளன. அந்த மரங்களை அகற்றிப் போக்குவரத்தைச் சீர்படுத்தும் பணிகள் 99 சதவீதம் முடிந்துள்ளன. இதனால், போக்குவரத்து சீர்பட்டுள்ளது. சேதம் அடைந்த சாலைகள் குறித்த விவரங்களை நெடுஞ்சாலைத் துறையினர் கணக்கெடுத்து வருகின்றனர். அவர்களது அறிக்கை ஓரிரு நாள்களில் கிடைக்கும் என வருவாய்த் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

சேதம் அடைந்த மீன்பிடிப் படகுகள் குறித்த விவரங்களை மீன்வளத் துறையினர் சேகரித்து வருகின்றனர். விவரங்கள் கிடைத்த பிறகு, மீனவர்களுக்கு நிவாரணத் தொகை வழங்கப்படும் என அந்தத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

9 பேரின் குடும்பத்துக்கு நிவாரணம்: புயல், மழை காரணமாக சனிக்கிழமை உயிரிழந்த 9 பேரின் குடும்பங்களுக்கு தலா ரூ.2 லட்சத்தை முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் சுவர் இடிந்து விழுந்ததில் 3 பேரும், கடலூரில் 5 பேரும், தேனி மாவட்டத்தில் ஒருவரும் உயிரிழந்தனர்.

முதல்வரின் பொது நிவாரண நிதியில் இருந்து முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ள இந்த நிவாரணத் தொகை உடனுக்குடன் வழங்கப்பட்டு வருவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

**50 ஆயிரம் ஏக்கர் பயிர்கள் சேத்தியாத்தோப்பில் சேதம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 02,2012,00:18 IST

கருத்தை பதிவு செய்ய

சேத்தியாத்தோப்பு :சேத்தியாத்தோப்பில் "தானே' புயலால் 50 ஆயிரம் ஏக்கர் பயிர்கள் சேதமானது. சேத்தியாத்தோப்பு, மஞ்சக்கொல்லை, வளையமாதேவி, ஓடாக்க நல்லூர், ஒரத்தூர், சோழத்தரம் உள்ளிட்ட 50க்கும் மேற்பட்ட கிராமங்களில் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மரங்கள் வேரோடு சாய்ந்தன. இப்பகுதிகளில் 50 ஆயிரம் ஏக்கர் விளை நிலங்களில் பயிரிடப்பட்டிருந்த நெல், கரும்பு மற்றும் வாழை உள்ளிட்ட பயிர்கள் பெருத்த சேதமடைந்தன. எய்யலூர், வாழைக்கொல்லை, ஓடாக்க நல்லூர் உள்ளிட்ட பகுதிகளில் பயிரிடப்பட்டிருந்த செங்கரும்பு பயிர்களும் மிகுந்த சேதமடைந்தன. சேத்தியாத்தேப்பு எம்.ஆர்.கே.கூட்டுறவு சர்க்கரை ஆலையில் மேற்கூரைகள் அனைத்தும் புயல் தாக்கத்தில் சிதைந்து சின்னாபின்னமானது. இதன் காரணமாக ஆலை அரவைப் பணி தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

தேத்தியாத்தோப்பு பகுதியில் ஆயிரக்கணக்கான மின்கம்பங்கள் உடைந்ததால் கடந்த மூன்று தினங்களாக அப்பகுதி முழுவதும் இருளில் மூழ்கியுள்ளன. இப்பகுதிகளில் சேத்தியாத்தோப்பு மின்சார வாரியத்தின் கடும் முயற்சிக்கு பிறகு நகர மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் நேற்று முன்தினம் இரவு மின் இணைப்பு வழங்கப்பட்டது.

மற்ற பகுதிகளில் மின் இணைப்பு வழங்க இரண்டு, மூன்ற நாட்கள் ஆகும் என மின் வாரிய அதிகாரிகள் கூறினர். புயல் காரணமாக வீராணம் ஏரி, மணிமுத்தாறு பகுதிகளில் இருந்து வெள்ளாற்றுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. வெள்ளம் மற்றும் புயல் பாதிப்பு குறித்த தகவல்களை அறிய மாவட்ட நிர்வாகத்தால் வழங்கப்பட்ட கருவிகளின் இணைப்புகள் துண்டிக்கப்பட்டதால் நீர் வரத்தின் அளவு மற்றும் விவரங்கள் முழுமையாக தெரியவில்லை. கடந்த இரண்டு நாட்களுக்கு பிறகு பஸ் போக்குவரத்து துவங்கியுள்ள நிலையில் கடைவீதிகளில் மக்கள் நடமாட்டம் அதிகரித்துள்ளது. இருந்த போதும் கிராமங்களில்இருள் சூழ்ந்த நிலை ஒரு வாரம் நீடிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**புயலால் பாதித்த முந்திரி விவசாயிகள் மறுவாழ்விற்கு அரசுக்கு கோரிக்கை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 02,2012,00:17 IST

கருத்தை பதிவு செய்ய

பண்ருட்டி :புயலால் சீரழிந்த முந்திரி, பலா பயிர்களை மீண்டும் புதுப்பித்து பாதுகாத்திட தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர். பண்ருட்டி, காடாம்புலியூர், முத்தாண்டிக்குப்பம், மேலிருப்பு, கீழ்மாம்பட்டு, மேல்மாம்பட்டு, கருக்கை, பேர்பெரியான்குப்பம் உள்ளிட்ட 60 கிராமங்களை சேர்ந்த பலர் முந்திரி, பலா பயிர் செய்யும் விவசாயிகளை நம்பி தொழில் செய்து வருகின்றனர். கடந்த 30ம் தேதி வீசிய "தானே' புயலில்

முந்திரி, பலா, மா, தேக்கு போன்ற மரங்கள் 80 சதவீதம் வேரோடு சாய்ந்து விறகு கொட்டி கிடக்கும் இடம் போல் காட்சியளிக்கின்றன. ஒரு ஏக்கர் முந்திரி, பலா வைத்திருந்தவர்கள் 3 மாத பராமரிப்பில் ஒரு லட்சம் என சராசரியாக ஆண்டு தோறும் வருமானம் கிடைத்து வந்தது.
இதில் தற்போது 80 சதவீதம் மரங்கள் முறிந்து சேதமடைந்துள்ளன. சேதமடைந்த ஒரு முந்திரி மரங்களை வெட்டி எடுக்கவே 3,000ம் முதல் 5,000 ரூபாய் வரை செலவாகும் நிலை. கிளைகள் முறிந்தவைகளை அகற்றி தை மாதம் மாற்று பயிர் செய்வதற்கு விவசாயிகள் முயற்சி செய்தாலும் 80சதவீத விவசாயிகளுக்கு ஆழ்துளை மோட்டார் வசதி இல்லாததால் வானம் பார்த்த பூமியாக மழையை நம்பியே பயிர் செய்ய இயலும்.
தற்போது மழைகாலம் முடிந்து பனிக்காலம் துவங்கியுள்ளதால் நவதான்யம், புயலில் தேறிய முந்திரி, பலாவிற்கு நடுவில் ஊடுபயிர்கள் செய்து கூட ஜீவனம் செய்ய முடியாத நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர். இதனால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அரசு பயிர் நிவாரணம் வழங்குவதோடு மட்டுமல்லாது மீண்டும் முந்திரி, பலா மரங்கள் வளர்த்திட உரிய உதவி செய் திட வேண்டும் என எதிர்பார்க்கின்றனர்.

**பால் கூடுதல் விலைக்கு விற்பனை: கடலூரில் அமைச்சர் ஆய்வு**

First Published : 02 Jan 2012 10:03:07 AM IST

கடலூர், ஜன.2: கடலூர் மாவட்டத்தில் புயல் பாதிக்கப்பட்ட பகுதிகளில் குடிநீர், மின்சாரம், பால் உள்ளிட்டவை வழங்குவதில் பெரும் தாமதங்களும் தடைகளும் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் நெருக்கடியைப் பயன்படுத்தி பால் கூடுதல் விலைக்கு விற்கப்படுவதாக புகார் எழுந்துள்ளது.
இதனால் முதல்வர் உத்தரவின் பேரில் அமைச்சர் சம்பத், கடலூரின் சில பகுதிகளுக்கு இன்று அதிகாலை முதலே ஆய்வில் ஈடுபட்டார்.
திருப்பாதிரிபுலியூர், மஞ்சக்குப்பம் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள ஆவின் பால் வழங்கு மையங்களில் இன்று அதிகாலை நேரில் ஆய்வு செய்த அவர், பொதுமக்களிடம் விசாரணை மேற்கொண்டார். பால் கூடுதல் விலைக்கு விற்கப்படுகிறதா எனக் கேட்டார். தனியார் பால் நிறுவனத்தினர்தான் கூடுதல் விலைக்கு விற்பதாக தெரிய வந்தது. இதையடுத்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் உறுதியளித்தார். அவருடன் ஆட்சியர் அமுதவள்ளி, ஆவின் பொதுமேலாளர் உள்ளிட்ட அதிகாரிகள் சென்றனர்.

**உழவர்சந்தையில் 17 லட்சம் ரூபாய்க்கு காய்கறி விற்பனை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 02,2012,00:55 IST

ஓசூர் : ஓசூர் உழவர்சந்தையில், புத்தாண்டையொட்டி ஒரே நாளில், 17 லட்சம் ரூபாய்க்கு, 122 டன் காய்கறிகள் விற்பனையானது. ஓசூர் உழவர்சந்தை காய்கறிகள் வரத்து மற்றும் விற்பனையில் தமிழகத்தில் திருப்பூருக்கு அடுத்து இரண்டாவது இடத்தில் செயல்படுகிறது. ஓசூர் தாலுகாவில் தமிழகத்தில் அதிகளவு காய்கறிகள் உற்பத்தியாவதால் உழவர்சந்தைக்கு தினசரி 100 டன் வீதம் காய்கறிகள் விற்பனைக்கு வருகிறது. பெரிய விவசாயிகள், பத்தலப்பள்ளி மார்க்கெட், பெங்களூரு மார்க்கெட் மூலம் வடமாநிலங்களுக்கும், தமிழகத்தின் பிற மாவட்டங்களுக்கு தினசரி பல ஆயிரம் டன் காய்கறிகளை தினசரி ஏற்றுமதி செய்கின்றனர். உழவர்சந்தைக்கு தினசரி 500க்கும் மேற்பட்ட விவசாயிகள், காய்கறிகள், பூக்கள், பழங்கள் கொண்டு வருகின்றனர். பொதுவாக சனி, ஞாயிற்று கிழமைகளில் உழவர்சந்தையில் காய்கறிகள் வாங்குவதற்கு பொதுமக்கள் கூட்டம் அலைமோதும். இந்நிலையில் நேற்று புத்தாண்டு என்பதாலும், ஞாயிற்று கிழமை என்பதாலும், உழவர்சந்தையில் காய்கறிகள் வாங்க பொதுமக்கள் குவிந்தனர். விவசாயிகளும் புத்தாண்டு விற்பனையை குறி வைத்து அதிகளவு காய்கறிகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர். நேற்று ஒரே நாளில் உழவர் சந்தையில், 122 டன் காய்கறிகள் விற்பனைக்கு வந்தது. இதன் மூலம், 17 லட்சம் ரூபாய்க்குள் காய்கறிகள் விற்பனை நடந்துள்ளது. 15 ஆயிரம் பொதுமக்கள் நேற்று உழவர்சந்தையில் காய்கறிகள் வாங்கி சென்றனர். இதுகுறித்து உழவர்சந்தை அதிகாரிகள் கூறுகையில், "கடந்த ஒரு வாரமாக தக்காளி, மொச்சை வரத்து கடந்த சில நாளாக அதிகளவு உள்ளது. மொச்சை 4 டன் நேற்று விற்பனைக்கு வந்தது. தக்காளி 4 டன் விற்பனைக்கு வந்தது. மற்ற காய்கறிகள் எப்போதும் போல் சராசரியாக வந்தது' என்றனர்.

**பேரிகையில் 500 ஏக்கர் விவசாயம் அழியும் அபாயம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 02,2012,01:01 IST

கருத்தை பதிவு செய்ய

ஓசூர் : ஓசூர் அருகே பேரிகை பகுதியில் ஏரி பாசனம் கேள்விகுறியாகி விட்டதால், 500 ஏக்கர் விவசாய நிலங்கள் பாசனத்திற்கு தண்ணீர் இல்லாமல் அழியும் அபாயம் ஏற்பட்டுள்ளது. அதனால், கெலவரப்பள்ளி அணையில் இருந்து பேரிகை ஏரிக்கு கால்வாய் வெட்டி தென்பெண்ணை ஆற்று தண்ணீரை கொண்டு வர விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். ஓசூர் அருகே சூளகிரி, பேரிகை, அத்திமுகம், நெரிகம், பாகலூர் பகுதியில், 15 ஆயிரம் ஏக்கரில்

விவசாயிகள் காய்கறிகள், பூக்கள், ராகி, நெல் உள்ளிட்ட பல்வேறு வகை விவசாயம் செய்து வருகின்றனர். இந்த பகுதியில் ஆற்றுப்பாசனம் இல்லாததால், மழையை எதிர்பார்த்து ஏரிகள் மற்றும் கிணற்று பாசனத்தை நம்பி விவசாயிகள் விவசாயம் செய்கின்றனர். பருவ மழை ஏமாற்றும் பட்சத்தில் விவசாயிகள், ஏரி, கிணறுகளில் தண்ணீர் வறண்டு விவசாயிகள் செய்ய முடியாத அவலநிலை ஏற்பட்டுள்ளது. சூளகிரியில் துரை ஏரி மூலம் 200 ஏக்கர் விவசாய நிலம் பாசனம் பெற்றது. தற்போது துரை ஏரியில் ஆண்டு முழுவதும் தண்ணீர் இல்லாததால் விவசாயம் கேள்விகுறியானது. அதனால், விவசாயிகள் கெலவரப்பள்ளி அணையில் இருந்து துரைஏரிக்கு தண்ணீர் கொண்டு வர பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டனர். இதையடுத்து கெலவரப்பள்ளி அணைக்கட்டில் இருந்து முத்தாலி வழியாக, 88 லட்சம் ரூபாய் செலவில் பாசன கால்வாயை நீட்டித்து துரை ஏரிக்கு தண்ணீர் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதேபோல், அத்திமுகம், பேரிகை ஏரிகளுக்கும் கெலவரப்பள்ளி அணைக்கட்டில் இருந்து கால்வாயை நீட்டிக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். பேரிகை, அத்திமுகம், நெரிகம் மற்றும் சுற்றுவட்டார கிராமங்களில், 500 ஏக்கரில் விவசாய சாகுபடி பணிகள் நடக்கிறது.

இங்கு காய்கறிகள், பூக்கள், பழங்கள், நெல் உள்ளிட்ட பல்வேறு விவசாய பயிர்கள் சாகுபடி செய்யப்படுகிறது. இப்பகுதியில் விவசாய சாகுபடிக்கு ஏற்ற நல்ல தட்பவெப்ப நிலையும், மண் வளமும் காணப்படுகிறது. அதனால், அதிகளவில் காய்கறிகள் விளைச்சல் நடக்கிறது. தற்போது பருவமழை ஏமாற்றத்தால் பேரிகை, அத்திமுகம் உள்ளிட்ட சுற்றுவட்டார ஏரிகளுக்கு நீர் வரத்து குறைந்து வறட்சி நிலவுகிறது. அதனால், 500 ஏக்கர் விவசாயம் கேள்விகுறியாக துவங்கியுள்ளது. பேரிகை, அத்திமுகம் பகுதியை பொறுத்தவரை மக்கள், விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த கூலித்தொழிலை நம்பி குடும்பம் நடத்தி வருகிறது. தற்போது பாசனத்திற்கு தண்ணீர் இல்லாமல் விவசாயம் அழிந்து வருவதால், விவசாயம் சார்ந்த கூலி தொழிலாளர்கள் வேலையிழந்துள்ளனர்.

அதனால், அவர்கள் கர்நாடகா மாநிலத்திற்கு கூலிவேலைக்கு இடம்பெயர்ந்துள்ளனர். அதனால், துரைஏரியை போல் பேரிகை, அத்திமுகம் ஏரிகளுக்கும் கெலவரப்பள்ளி அணைக்கட்டில் இருந்து கால்வாய் அமைத்து தென்பெண்ணை ஆற்று நீரை கொண்டு வர வேண்டும் என, விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர். பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் சுந்தரம் கூறுகையில், ""கொடியாளம் அணையில் இருந்து பேரிகை ஏரிக்கு தண்ணீர் கொண்டு வர கடந்தாண்டு ஆய்வு செய்தோம். பேரிகை மேட்டுப்பகுதி என்பதால், அந்த திட்டம் கைவிடப்பட்டது. தற்போது கெலவரப்பள்ளி அணை கால்வாயை நீட்டிக்க ஆய்வு செய்து வருகிறோம்," என்றார்.

**பெரம்பலூர் அருகே வெண்பன்றி வளர்ப்பு பயிற்சி: பல மாவட்ட விவசாயிகள் பங்கேற்பு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 02,2012,00:48 IST

பெரம்பலூர்: பெரம்பலூர் மாவட்டம் வாலிகண்டபுரத்திலுள்ள ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மைய வளாக பயிற்சி கூடத்தில், வெண்பன்றி வளர்ப்பு குறித்த இலவச பயிற்சி முகாம் நேற்று நடந்தது. பயிற்சி முகாமுக்கு திட்ட ஒருங்கிணைப்பாளர் மாரிமுத்து தலைமை வகித்தார். வேளாண் அறிவியல் மைய கால்நடை அறிவியல் தொழில்நுட்ப வல்லுனர் சிவகுமார், வெண்பன்றி வளர்ப்புக்கான சீமைப்பன்றி இனங்களை தேர்வு செய்தல், கொட்டகை அமைத்தல், தீவன மேலாண்மை, இனவிருத்தி மேலாண்மை, பொலிப்பன்றிகள், சினைப் பன்றிகளின் பராமரிப்பு, இளம் பன்றிகள் மற்றும் பன்றிகளில் ஏற்படும் நோய்களை கட்டுப்படுத்தும் முறைகள், தடுப்பூசி முறைகள், தீவன குறைபாடுகளால் ஏற்படும் நோய்களும் அதற்கான தடுப்பு முறைகள், பதிவேடுகள் பராமரித்தல் மற்றும் வெண் பன்றி பண்ணையுடன் ஒருங்கிணைந்த மீன் பண்ணையம் அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் பயிற்சி அளித்தார். தொடர்ந்து தந்தை ரோவர் வேளாண் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள மாதிரி வெண்பன்றி பண்ணைக்கு பயிற்சியாளர்களை அழைத்து சென்று, பன்றி வளர்ப்பு முறைகள், கொட்டகை அமைப்பு, இளம் பன்றிகளில் பற்கள் வெட்டுதல், வால் வெட்டுதல் மற்றும் இனவிருத்திக்கு பயன்படாத கிடாபன்றிக்கு ஆண்மை நீக்கம் செய்தல், பெண் பன்றிகளில் சினை பருவ அறிகுறிளை கண்டறிதல், வெண் பன்றிகளுக்கான தீவனம் தயாரித்து அளித்தல் குறித்து நேரடி செயல் விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது.
இப்பயிற்சியில் பெரம்பலூர், அரியலூர், கடலூர் மற்றும் திருச்சி ஆகிய பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த 30க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர். பயிற்சியில் பங்கேற்ற நபர்களுக்கு வெண்பன்றி வளர்ப்பு குறித்த பயிற்சி கையேடு அளிக்கப்பட்டது. இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை, வேளாண் விரிவாக்க தொழில்நுட்ப வல்லுனர் மணிகண்டன் மற்றும் பணியாளர்கள் செய்திருந்தனர்.

**சொட்டு நீர்ப்பாசனம் தொடர்பாக பயிற்சி முகாம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 02,2012,00:44 IST

புதுக்கோட்டை: புதுக்கோட்டை மாவட்டத்தில் சொட்டுநீர் பாசன அமைப்பை தொழில்நுட்ப ரீதியாக பராமரிப்பதற்கான வழிமுறைகள் குறித்து விவசாயிகளுக்கு வம்பன் வேளாண் அறிவியல் நிலையம் பயிற்சி அளிக்க உள்ளது. இதுகுறித்து வம்பன் வேளாண் அறிவியல் நிலையம்

வெளியிட்டுள்ள அறிக்கை: புதுக்கோட்டை மாவட்டத்தில் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தி, வேளாண் உற்பத்தியை அதிகரிக்கும் விதமாக விவசாயிகளுக்கு சொட்டுநீர் பாசனம் மற்றும் தெளிப்புநீர் பாசனம் அமைக்க அரசு முழு மானியம் வழங்கிவருகிறது. இதன்மூலம் ஏராளமான விவசாயிகள் பாசனவசதி பெற்றுள்ளனர். சொட்டுநீர் பாசனம் முறையாக பராமரிக்காவிட்டால், அவை விரைவில் முடங்கிவிட வாய்ப்பு உள்ளது. இதை தவிர்க்கும் விதமாக தொழில்நுட்ப ரீதியாக சொட்டுநீர் பாசன அமைப்பை பராமரிப்பதற்கான வழிமுறைகள் குறித்து விவசாயிகளுக்கு வம்பன் வேளாண் அறிவியல் நிலையம் பயிற்சி அளிக்க முடிவுசெய்துள்ளது. வரும் மூன்றாம் தேதி காலை 10 மணி முதல் மாலை ஐந்து மணி வரை நடைபெறவுள்ள பயிற்சி முகாமில் சொட்டுநீர் பாசன வசதி பெற்றுவரும் விவசாயிகள் அனைவரும் பங்கேற்கலாம்.

**ஏலக்காய் ஆராய்ச்சி நிலைய பணிகள் துவங்குவதில் பாதிப்பு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 01,2012,22:12 IST

கருத்தை பதிவு செய்ய

தாண்டிக்குடி :தாண்டிக்குடி மலைப்பகுதியில் ஏலக்காய் மற்றும் வாசனை திரவியங்கள் ஆராய்ச்சி நிலையத்திற்கு, நிலம் கையகப்படுத்துவதில் தொடர்ந்து சுணக்க நிலை நீடித்து வருகிறது. தாண்டிக்குடி மலைப்பகுதியில் ஆயிரம் ஹெக்டேரில் ஏலக்காய் விவசாயம் செய்யப்பட்டது. இதை மையமாக கொண்டும், சீதோஷ்ண நிலையை அடிப்படையாக வைத்து தடியன்குடிசையில் 1983 ல் இந்திய ஏலக்காய் மற்றும் வாசனை பயிர்கள் ஆராய்ச்சி நிலையம் செயல்படதுவங்கியது. தொடர்ந்து 2004 வரை ஆராய்ச்சி பணிகள் சிறப்பாக செயல்பட்டு வந்தது. துவக்கத்தில் வனத்துறை நிலத்தில் ஒப்பந்த அடிப்படையில் மையம் செயல்பட்டு வந்தது. இதற்கான ஒப்பந்த காலம் கடந்த 2004 ல் முடிவுற்றது. வனத்துறையின் பல கெடுபிடிகளால் தொடர்ந்து இங்கு செயல்பட முடியாத நிலை ஏற்பட்டது. இதையடுத்து ஆராய்ச்சி மையத்திற்கு என சொந்தமான இடம் ஒதுக்கி நிலையான இடத்தில் செயல்படவைக்க முடிவு செய்யப்பட்டது.
இதற்கென தாண்டிக்குடி, பட்லாங்காடு பகுதியில் வருவாய் நிலம் 15 ஏக்கர் கையகப்படுத்தும் பணி 2008 ல் துவங்கியது. இடம் தேர்வு செய்வதில் தொடர்ந்து சுணக்க நிலை ஏற்பட்டதால் ஆராய்ச்சியாளர்களால் பணிகளை தொடரமுடியவில்லை. ஆராய்ச்சியாளர்கள் மற்றும் அதிகாரிகள் வேறு இடங்களுக்கு மாறுதல் செய்யப்பட்டனர். ஒரு சில களப்பணியாளார்கள் மட்டும் நாற்று உற்பத்தி செய்யும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.
கடந்த ஏழு ஆண்டுகளாக நீடிக்கும் இப்பிரச்னையால் ஏலக்காய் விவசாயம் பாதியாக குறைந்தும், தகுந்த ஆலோசனைகளின்றி நோய் பாதிப்புகளால் அழிவின் விளிம்பில் உள்ளது. இதே நிலை நீடிக்கும் பட்சத்தில் நறுமணப் பொருட்கள் உற்பத்தியில் பெயர் பெற்ற தாண்டிக்குடி

மலைப்பகுதி, நிலை மாறுபடும் சூழல் உள்ளது. மாவட்ட நிர்வாகம், ஆராய்ச்சி நிலையத்திற்கு என இடம் ஒதுக்கீடு செய்து பணிகள் தொடர துரித நடவடிக்கை எடுக்க வேண்டும்.

.

**விலை கிடைத்தும் காபி விளைச்சல் இல்லை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 01,2012,21:35 IST

கருத்தை பதிவு செய்ய

போடி :தேனி மாவட்டத்தில் காபிக்கு நல்ல விலை கிடைத்தும், போதுமான விளைச்சல் இல்லாததால் விவசாயிகள் கலக்கம் அடைந்துள்ளனர். தேனி மாவட்டம், போடி அருகே குரங்கனி, முட்டம், முதுவாக்குடி, பிச்சாங்கரை, போடிமெட்டு, வடக்குமலை, அகமலை பகுதிகளில் 5 ஆயிரம் ஏக்கருக்கு மேல் காபி பயிரிடப்பட்டுள்ளது. செப்டம்பர் முதல் ஜனவரி மாதங்கள் காபி சீசனுக்குரிய காலமாகும். 9 ஆண்டுகளுக்கு முன் காபி கொட்டை 120 ரூபாய் முதல் 140 ரூபாய் வரை விலை போனது. 6 ஆண்டுக்கு முன்பு காபி பழம் விளைச்சல் அதிகம் இருந்தும் விலை வீழ்ச்சி அடைந்து கிலோ 35 ரூபாய்க்கு விற்பனையானது.

சமீபத்தில் பெய்த மழை, மண்சரிவால் போடிமெட்டு, அகமலை, பிச்சாங்கரை, வடக்குமலை பகுதிகளில் காபி பழங்கள் சேதமாகின்றன. தற்போது நிலவி வரும் பனிப்பொழிவால் பூச்சிகள் தாக்கி உதிர்ந்து வருவதால், கடந்த ஆண்டை காட்டிலும் தற்போது விளைச்சல் குறைந்துள்ளது. காபி பழம் 65 முதல் 75 ரூபாய் வரையும், உருளை 80 முதல் 100 ரூபாய் வரையும், ரோபர்ட்சா 80 முதல் 100 வரையும், அரபி தளர் 185 முதல் 200 ரூபாய் வரையும், அரிசி 135 ரூபாய் முதல் 140 வரை விலை உயர்ந்துள்ளது. பனிப்பொழிவு காரணமாக மேலும் விலை உயரும் என்பதால் விவசாயிகளும், வியாபாரிகளும் இருப்பு வைத்து வருகின்றனர். விவசாயிகள் கூறுகையில்,"பனிப்பொழிவால் பூக்கள் கருகி, உதிர்ந்து காபி பயிர்கள் சேதமடைந்துள்ளன.விலை இருந்தும் விளைச்சல் கிடைக்காத நிலை உள்ளது',என்றனர்.

**பூச்சி தாக்குதலால் கத்தரி விவசாயம் பாதிப்பு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 01,2012,21:35 IST

கருத்தை பதிவு செய்ய

தேனி :தேனி பகுதியில் பூச்சி தாக்குதலால் கத்தரிக்காய் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. மாவட்டத்தில் தோட்டப்பயிர் சாகுபடி பிரதானமாக மேற்கொள்ளப்படுகிறது. தென்மாவட்டங்களின் கத்தரிக்காய் தேவைக்கு, தேனி பகுதி விவசாயம் பெரிய அளவில்

கைகொடுக்கிறது. கடந்த மூன்று மாதத்திற்கு முன் தொடங்கிய, கத்தரி விவசாயம், தற்போது இறுதி நிலையில் உள்ளது.

இதனால், கத்தரி அறுவடை குறைந்துள்ளது. பூச்சி தாக்குதல் அதிகரித்துள்ளதால், வரத்து கடுமையாக பாதித்துள்ளது. கிலோ எட்டு ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்பட்ட கத்தரி, தற்போது ஆறு ரூபாயாக குறைந்துள்ளது. பூச்சி தாக்குதலும், விலை குறைவும், கத்தரி விவசாயிகளை பாதித்துள்ளது. பாலார்பட்டியை சேர்ந்த கருப்பையா கூறியதாவது: துவக்கத்தில் கத்தரி விளைச்சல் அமோகமாக இருந்தது. இறுதி கட்டத்தில், விளைச்சல் குறைந்துவிட்டது. பூச்சி தாக்குதல் உள்ளதால், நிறைய கழிவு போகிறது. தற்போதுள்ள செடிகளை அழித்துவிட்டு, இரண்டாம் கட்ட விவசாயம் செய்ய முடிவு செய்துள்ளோம், என்றார்.

**தோட்டக்கலைத்துறை விவசாயிகளுக்கு அழைப்பு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 01,2012,21:34 IST

கருத்தை பதிவு செய்ய

தேவதானப்பட்டி :சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியத்தில், சொட்டுநீர் பாசனம் அமைத்துக் கொடுக்க உள்ளதாக, பெரியகுளம் தோட்டக்கலை உதவி இயக்குனர் முத்தையா விவசாயிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.அவர் கூறியிருப்பதாவது: நிலத்தடிநீர் மட்டத்தை அதிகரிக்கவும், தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தவும், உரத்தேவையை சொட்டுநீர் பாசனம் மூலம் பயிர்களுக்கு செலுத்தவும், நீண்ட காலம் நன்மை தரும் திட்டமாகிய நுண்ணீர்ப் பாசன திட்டத்தை அரசு செயல்படுத்தி வருகிறது. இதன் பயன்பாட்டை அதிகரிக்க சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீதமும், மற்ற விவசாயிகளுக்கு 75 சதவீத மானியம் வழங்குகிறது. சிறு, குறு விவசாயிகள் என்ற சான்றினை தாசில்தார் பதவிக்கு குறைவில்லாத வருவாய்த்துறை அலுவலரிடம் பெறவேண்டும்.

கம்யூட்டர் சிட்டா, அடங்கல், வயல் வரைபடம், குத்தகை நிலமாக இருந்தால் 10 ஆண்டுகளுக்கு பதிவு பத்திர நகல், போதிய நீர்ப்பாசன வசதியுடன் மோட்டார் வசதி. உரிய ஆவணங்களுடன் வடுகபட்டியில் உள்ள தோட்டக்கலை உதவி அலுவகத்தை தொடர்பு கொள்ள வேண்டும்,என தெரிவித்தார்.

**தோட்டக்கலை பயிர்கள் சேதம்: கணக்கெடுக்கும் பணி தீவிரம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 01,2012,23:45 IST

கருத்தை பதிவு செய்ய

விழுப்புரம் :விழுப்புரம் மாவட்டத்தில் புயலால் சேதமடைந்த தோட்டக்கலை பயிர்கள் குறித்து அலுவலர்கள் தீவிர கணக்கெடுப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். "தானே' புயல் காரணமாக விழுப்புரம் மாவட்டத்தில் தோட்டக்கலை பயிர்களான வாழை, மஞ்சள், மா, கொய்யா, முந்தரி, சவுக்கு, புளி, பூ வகைப் பயிர்கள் மற்றும் காய்கறி பயிர்கள் அதிகளவில் சேதமடைந்துள்ளன. மாவட்டம் முழுவதும் 10 ஆயிரம் ஏக்கர் பரப்பளவிற்கு மேல் தோட்டக்கலை பயிர்கள் சேதமடைந்துள்ளாக கணக்கெடுப்பு செய்துள்ளனர். இதற்கான சேத மதிப்புகளை விழுப்புரம் மாவட்டத்திலுள்ள 22 ஒன்றியங்களிலும் தோட்டக்கலை உதவி வேளாண்மை அலுவலர்கள் நேரடியாக வயல்களுக்கு சென்று ஆய்வு செய்து கணக்கெடுப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். விழுப்புரம் அடுத்த விராட்டிக்குப்பத்தில் பல ஏக்கர் பரப்பளவில் சேதமடைந்துள்ள வாழைத் தோட்டங்களை விழுப்புரம் தோட்டக்கலை உதவி இயக்குனர் ராஜாமணி தலைமையில் உதவி வேளாண்மை அலுவலர்கள் கிருஷ்ணன், பரமசிவம் ஆகியோர் நேற்று கணக்கெடுப்பு செய்தனர். இதில் அந்த கிராமத்தை சேர்ந்த விவசாயிகள் தங்களின் வேளாண் பயிர்கள் சேதம் குறித்து தகவல்கள் தெரிவித்தனர்.

**ஊட்டச்சத்து பாதுகாப்பு குறித்து திண்டிவனத்தில் கருத்தரங்கம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 01,2012,23:43 IST

கருத்தை பதிவு செய்ய

திண்டிவனம் : தீவிர சிறுதானிய சாகுபடி மூலம் ஊட்டச்சத்து பாதுகாப்பு குறித்த விவசாயிகளுக்கான கருத்தரங்கம் திண்டிவனத்தில் நடந்தது. கருத்தரங்கு நிகழ்ச்சியை டாக்டர் அரிதாஸ் எம்.எல்.ஏ., துவக்கி வைத்தார். திண்டிவனம் உழவர் பயிற்சி நிலைய துணை இயக்குனர் ரத்தினசபாபதி வரவேற்றார். மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் ராஜேந்திரன், துணை இயக்குனர் அன்பழகன், எண்ணெய்வித்துக்கள் ஆராய்ச்சி நிலைய இணை பேராசிரியர் ராமலிங்கம், ஓய்வு பெற்ற இணை இயக்குனர் அண்ணாமலை, கலெக்டரின் உதவியாளர் சக்ரவர்த்தி, விதைசான்று அலுவலர் சந்துரு உள்ளிட்ட பலர் பேசினர். சிறு தானியங்களின் உற்பத்தி பெருக்கம் பற்றியும், அவைகளை பயன்படுத்தி தயாரிக்கப்படும் உணவுகளால் கிடைக்கும் ஊட்டச்சத்து பற்றியும் விளக்கம் அளிக்கப்பட்டது. இதில் விழுப்புரம், வேலூர் மாவட்ட விவசாயிகள் கலந்துக் கொண்டனர். உழவர் பயிற்சி நிலைய அலுவலர் குமாரிஆனந்தி நன்றி கூறினார்.

பொங்கலுக்கு சூடு பிடிக்கும் மார்க்கெட்

ஜனவரி 01,2012,14:15



மழையால், கொப்பரை உற்பத்தி தடைபட்டுள்ள நிலையில், பொங்கல் பண்டிகைக்கு மார்க்கெட் சூடுபிடிக்கும் என்ற நம்பிக்கையில், விவசாயிகள் உள்ளனர். காங்கேயம் மார்க்கெட்டில், 24ம் தேதி நிலவரப்படி, கொப்பரை கிலோவுக்கு 49.50, தேங்காய் எண்ணெய் 15 கிலோ டின்னுக்கு 1,120, தேங்காய் பவுடர் கிலோவுக்கு 76 ரூபாய், விவசாயிகள் சொந்தப் பொறுப்பில் பறித்து உரித்த தேங்காய் டன்னுக்கு 13 ஆயிரத்து 500, சென்னை, மதுரை உட்பட பகுதிகளுக்கு உணவுத் தேவைக்காக அனுப்பும் தேங்காய் டன்னுக்கு 13 ஆயிரம் ரூபாய் கிடைத்தது.

விவசாயிகள் பறித்து இருப்பு வைத்திருக்கும் தேங்காய்க்கு 8.50, வியாபாரிகள் சொந்தப் பொறுப்பில் பறித்துக் கொள்ள தேங்காய்க்கு 7.50 கிடைத்தது. நேற்றைய நிலவரப்படி, கொப்பரை கிலோவுக்கு 48.50 - 50 வரையும், தேங்காய் பவுடர் கிலோவுக்கு 78, தேங்காய் எண்ணெய் 15 கிலோ டின்னுக்கு 1,100, விவசாயிகள் சொந்தமாக பறித்து உரித்த தேங்காய் டன்னுக்கு 13 ஆயிரத்து 500 முதல் 14 ஆயிரத்து 750 வரை, சென்னை, மதுரை உட்பட பகுதிகளுக்கு, உணவுத் தேவைக்காக அனுப்பப்படும் இளந்தேங்காய் டன்னுக்கு 12 ஆயிரத்து 700 ரூபாய் முதல் 13 ஆயிரம் வரை விலை கிடைத்தது. விவசாயிகள் பறித்து இருப்பு வைத்திருக்கும் தேங்காய்க்கு ஒன்பது ரூபாய், இளம் தேங்காய்க்கு 8.25, வியாபாரிகள் சொந்தப் பொறுப்பில் பறித்துக் கொள்ள தேங்காய்க்கு 7.50 விலை வழங்கப்பட்டது.

கொப்பரை உற்பத்தியாளர்கள் சங்க நிர்வாகிகள் கூறுகையில், "கடந்த வாரத்துடன் ஒப்பிடும்போது கொப்பரை விலையில் பெரிய மாற்றம் ஏற்படவில்லை. கேரளாவுக்கு கொப்பரை, தேங்காய் எண்ணெய் அனுப்புவது தடைபட்டுள்ளதாலும், ஆந்திராவில் இருந்து தமிழகத்துக்கு தேங்காய் வரத்து உள்ளதாலும், மார்க்கெட் ஸ்தம்பித்துள்ளது. மழை சாரல் உள்ளதாலும், கொப்பரை உற்பத்தி முடங்கியுள்ளது. கொப்பரை தயாரிப்பு பணியில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள், பொங்கல் பண்டிகைக்கு சென்று விட்டனர்' என்றனர். பொங்கல் பண்டிகைக்கு,

மார்க்கெட் சூடுபிடிக்கும் என்ற எதிர்பார்ப்பில், விவசாயிகளும், கொப்பரை உற்பத்தியாளர்களும் உள்ளனர்.

**தானே புயலால் முந்திரி, கரும்பு, வாழை 80 சதவீதம் சேதம் : விவசாயிகள் கடும் பாதிப்பு**

ஜனவரி 01,2012,12:16




பண்ருட்டி : கடலூர் மாவட்டத்தின் பிரதான பணப்பயிர்களான முந்திரி, கரும்பு பயிர்கள் "தானே' புயலின் ருத்ர தண்டவத்திற்கு, 80 சதவீதம் சேதமடைந்துள்ளதால், விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். கடலூர் மாவட்டம் குறிஞ்சிப்பாடி, பண்ருட்டி, விருத்தாசலம் தாலுகாக்களில், தோட்டக்கலை பயிர்களான முந்திரி, ஒரு லட்சத்து 20 ஆயிரம் ஏக்கரிலும், பலா மரங்கள், 3,000 ஏக்கரிலும் பயிரிடப்பட்டுள்ளன.

பண்ருட்டி பகுதியிலிருந்து முந்திரிகள் வெளிநாடு, வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படும். ஆண்டுதோறும் முந்திரிகள் தை மாதத்தில் பூ வைத்து, சித்திரை மாதம் முதல் அறுவடை செய்யப்படும். தற்போது பெய்த மழையில் அதிகளவிலான விளைச்சலை எதிர்பார்த்து விவசாயிகள் முந்திரி மரத்திற்கு உரம் வைத்து பராமரித்தனர். இந்நிலையில், நேற்று முன்தினம் வீசிய "தானே' புயலின் ருத்ர தாண்டவத்திற்கு மாவட்டம் முழுவதும் 80 சதவீதம் முந்திரி மரங்கள் முறிந்து விழுந்தும், வேரோடும் சாய்ந்தன. அதேபோல் பண்ருட்டி பலா பழமும் மிகவும் பிரசித்தி பெற்றது. புயலில் 80 சதவீத பலா மரங்கள் முறிந்து விழுந்தும், வேரோடும் சாய்ந்தன. இதனால், இந்தாண்டு முந்திரி, பலா விளைச்சல் கடுமையாக பாதித்துள்ளதால் விவசாயிகள் கடும் சோகத்தில் ஆழ்ந்துள்ளனர்.

பருப்பு உற்பத்தி 23 லட்சம் டன் உயர வாய்ப்பு

ஜனவரி 01,2012,07:48



நடப்பு 2011-12ம் பயிர் பருவத்தில் (ஜுலை-ஜுன்), நாட்டின் பருப்பு வகைகள் உற்பத்தி, 23 லட்சம் டன் அதிகரிக்கும் என்று மத்திய வேளாண் அமைச்சகம் மதிப்பிட்டுள்ளது. கடந்த 2010-11ம் பயிர் பருவத்தில், பருப்பு வகைகளின் உற்பத்தி,18 லட்சம் டன் அதிகரித்திருந்தது.
கரீப் பருவத்தில், பருவம் தவறி பெய்த மழையால், 6-7 லட்சம் எக்டேர் அளவில் பயிரிடப்பட்ட பருப்பு வகைகள் பாழாயின. இதனால் ஏராளமான விவசாயிகள் பாதிக்கப்பட்டனர். அதனால், ரபி பருவத்தில் பருப்பு விவசாயத்தை பெருக்கும் நோக்கில், மத்திய அர” குறிப்பிட்ட பகுதிகளை சேர்ந்த விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை வழங்கும் திட்டத்திற்கு, 800 கோடி ரூபாய் ஒதுக்கியது. இதன் காரணமாக, குறைந்தபட்சம் 4-5 லட்சம் எக்டேரில் மீண்டும் பருப்பு வகைகள் பயிரிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
பருப்பு மற்றும் எண்ணெய் வித்துக்கள் சாகுபடிக்காக மத்திய அரசின் வழக்கமான ஊக்கத் திட்டத்துடன், கூடுதலாக இந்த புதிய திட்டத்தை மத்திய அர” செயல்படுத்தி வருகிறது. எண்ணெய் வித்துக்களில் ஊடு பயிராக பருப்பு வகைகளை பயிரிட விவசாயிகள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.
இந்நிலையில், பருப்பு வகைகள் உற்பத்தி மத்திய அரசின் மதிப்பீட்டை விட, குறையும் என தொழில் துறை மதிப்பிட்டுள்ளது. இத்துறை, முன்னதாக பருப்பு வகைகளின் மொத்த உற்பத்தி, 1.85 கோடி டன்னாக இருக்கும் என மதிப்பிட்டிருந்தது. இது, மறுமதிப்பீட்டில், 1.70 கோடி டன்னாக குறைக்கப்பட்டுள்ளது.
சென்ற 2010-11ம் பயிர் பருவத்தில், நாட்டின் பருப்பு வகைகள் உற்பத்தி, சாதனை அளவாக 1.90 கோடி டன் என்ற அளவில் இருந்தது. இது, முந்தைய ஆண்டில் 1.46 கோடி டன்னாக இருந்தது.கடந்த 2010-11ம் நிதியாண்டில், 27 லட்சம் டன் பருப்பு வகைகள் இறக்குமதி செய்யப்பட்டன. நடப்பு 2011-12ம் நிதியாண்டிலும், இதே அளவிற்கு இறக்குமதி இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உள்நாட்டில் பருப்பு வகைகளுக்கான தேவை, ஆண்டிற்கு 1.80 கோடி முதல் 1.90 கோடி டன்னாக உள்ளது. உலகளவில், பருப்பு வகைகளின் உற்பத்தியில், இந்தியா முதலிடத்தில் உள்ள போதிலும், பற்றாக்குறையை சமாளிக்க, ஆண்டிற்கு 30 -40 லட்சம் டன் பருப்பு வகைகள் இறக்குமதி செய்யப்படுகிறது.

கடந்த 2008-09ம் நிதியாண்டில், பருப்பு வகைகளின் விலை உச்சத்தில் இருந்தது. கடந்தாண்டு முதல், உள்நாட்டில் பருப்பு வகைகள் உற்பத்தி அதிகரித்துள்ளதால், அதன் விலை 30-40 சதவீதம் குறைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

---

தினகரன்

**சாலையில் பூக்களை கொட்டிய விவசாயிகள்**

பதிவு செய்த நாள் : 1/2/2012 1:46:49 AM



தர்மபுரி : தர்மபுரியில், பூக்களை வாங்குவதற்கு வியாபாரிகள் வராததால், விவசாயிகள் பூக்களை சாலையில் கொட்டி சென்றனர். தர்மபுரி மாவட்டத்தில் தொப்பூர், ஜருகு, வெள்ளக்கல், நாகாவதி அணை, சக்கரப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் செண்டு மல்லி, சாமந்தி பூ உள்ளிட்ட மலர் பயிர்கள் அதிகளவில் பயிரிடப்பட்டுள்ளது. இவை தர்மபுரி பூ மார்க்கெட்டிற்கு கொண்டு வந்து விற்கப்படும். இங்கிருந்து பெங்களூருக்கு அதிகளவு பூக்கள் அனுப்பப்படுகிறது.

கடந்த வாரங்களில் ஒரு கிலோ சாமந்திப்பூ, ஸி30 வரை விலை போனது. தினமும் சராசரியாக 10 டன் வரை பூக்கள் விற்பனையாகும். நேற்று புத்தாண்டு தினம் என்பதால் பூவுக்கு அதிக விலை

கிடைக்கும் என்ற எதிர்பார்ப்போடு விவசாயிகள் மார்க்கெட்டிற்கு வந்தனர். ஆனால், பூக்களை வாங்க வியாபாரிகள் அதிகமாக வரவில்லை. நேற்று முன்தினம் கிலோ ஸி20க்கு விற்ற சாமந்தியை, நேற்று ஒரு ரூபாய்க்கு வாங்க கூட ஆளில்லை.

புயல் மழையால் பூக்களின் தரம் குறைந்திருந்ததாக தெரிகிறது. இந்த பூக்களை வாங்கி, வெளியூர் கொண்டு செல்வதற்குள் அழுகி விடும். இதனால் வியாபாரிகள் பூக்களை வாங்க ஆர்வம் காட்டவில்லை என கூறப்படுகிறது. காலை 10 மணி வரை பூக்கள் விற்பனையாகாததால் விவசாயிகள் பூக்களை சாலையில் கொட்டினர். சுமார் 5 டன் வரை பூக்கள் சாலையில் கொட்டப்பட்டன. பூக்கள் விற்பனையாகாததால் விவசாயிகள் பலரும் தங்கள் கிராமத்துக்கு திரும்பிச் செல்வதற்கு கூட பணம் இல்லாமல் அழுது தவித்தனர்.

**சில்லரை விற்பனை 15 சதவீதம் குறையும்**

பதிவு செய்த நாள் : 1/2/2012 1:44:59 AM



புதுடெல்லி : விலை உயர்வு காரணமாக, இந்த ஆண்டில் பிஸ்கட், டீ, சோப், பேஸ்ட் உள்ளிட்ட வேகமாக விற்பனையாகும் பொருட்கள் (எப்எம்சிஜி) விற்பனை 15 சதவீதம் வரை குறையும் என ஒரு ஆய்வு தெரிவிக்கிறது. 2012ம் ஆண்டில் சில்லரை வர்த்தக துறையின் வளர்ச்சி எவ்வாறு இருக்கும் என்பது குறித்து, இத்துறை சார்ந்தவர்கள், ஆய்வாளர்கள், பொருளாதார நிபுணர்கள், எப்எம்சிஜி நிறுவனங்களின் உயர் அதிகாரிகள் உட்பட சுமார் 100 பேரிடம் அசோசேம் அமைப்பு கருத்து கேட்டது.

இதன்படி, மூலப்பொருள் விலை உயர்வு, ரூபாய் மதிப்பு சரிவு ஆகிய காரணங்களால் உற்பத்தி செலவு அதிகரித்துள்ளதால் இந்த ஆண்டில் பிஸ்கட், பிரட், சாக்லெட், டீ, காபி, சோப், பேஸ்ட், பிரஷ் உள்ளிட்ட எப்எம்சிஜி பொருட்களின் விலை 10 சதவீதத்துக்கு மேல் உயரும் என ஆய்வில் தெரிய வந்துள்ளது. கடந்த 2011ம் ஆண்டில் அமெரிக்க டாலருக்கு நிகரான ரூபாய் மதிப்பு 18.79

சதவீதம் சரிந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

எப்எம்சிஜி பொருட்களை பேக்கிங் செய்வதற்கான விதிமுறைகளை அரசு கடுமையாக்கி உள்ளது. இது வரும் ஜுலை 1ம் தேதி முதல் அமலுக்கு வருகிறது. இதுவும் விலை உயர்வுக்கு வழிவகுக்கும் என இத்துறையை சேர்ந்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

தொழில் உற்பத்தி பாதிப்பு மற்றும் சர்வதேச நிதி நெருக்கடியால் வாங்கும் சக்தி குறைந்திருப்பது மற்றும் கடுமையான விலை உயர்வு ஆகிய காரணங்களால் இந்த ஆண்டில் எப்எம்சிஜி பொருட்களின் விற்பனை வளர்ச்சி 10 முதல் 15 சதவீதம் வரை குறையும் என ஆய்வில் பங்கேற்றவர்களில் பெரும்பாலானவர்கள் தெரிவித்தனர்.

---

## முல்லைப் பெரியாறு பிரச்சினையில் பிரதமர் நடவடிக்கை எடுப்பார் மத்திய மந்திரி மு.க.அழகிரி பேட்டி

*மதுரை, ஜன.2–*
*முல்லைப் பெரியாறு அணை பிரச்சினையில் பிரதமர் நடவடிக்கை எடுப்பார் என்று மத்திய மந்திரி மு.க.அழகிரி கூறினார்.*
*சுயேட்சை பெண் கவுன்சிலர்*
*மத்திய ரசாயனம் மற்றும் உரத்துறை மந்திரி மு.க.அழகிரி, மதுரையில் உள்ள தனது இல்லத்தில் தி.மு.க. தொண்டர்களையும், நிர்வாகிகளையும் நேற்று சந்தித்தார். அப்போது, மாநகராட்சி 53–வது வார்டு சுயேட்சை பெண் கவுன்சிலர் தங்கம் தட்சணாமூர்த்தி, மு.க.அழகிரிக்கு சால்வை அணிவித்து தி.மு.க.வில் இணைந்தார்.*
*அவருக்கு மு.க.அழகிரியும் சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார்.*
*அதைத்தொடர்ந்து மத்திய மந்திரி மு.க.அழகிரி நிருபர்களிடம் கூறியதாவது:–*
*பிரதமர் நடவடிக்கை*
*நாடும், நாட்டு மக்களும் நன்றாக இருக்க வேண்டும். இதுவே எனது புத்தாண்டு செய்தி. முல்லைப் பெரியாறு பிரச்சினை தொடர்பாக, தலைவர் கலைஞர் தலைமையில் குழுவாக சென்று பிரதமர் மன்மோகன்சிங்கை சந்தித்து மனு கொடுத்தோம். இந்த பிரச்சினை குறித்து அவரிடம் எடுத்து கூறினோம். இது தொடர்பாக அவர் நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார். பிரதமர் மீது நம்பிக்கை உள்ளது.*
*இவ்வாறு அவர் கூறினார்.*